# சுற்றாடல், வனசீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாக உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகள் தொடர்பில் சிறந்த அனுபவம் மற்றும் தேவையான தகைமைகளை பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**1. பதவி :** பணிப்பாளர் (நிர்வாகம்)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை :** 01

**சேவை பிரிவு :** சிரேஷ்ட முகாமையாளர் தரம் - (HM 1-1)

**சம்பள அளவு :** ரூபா 80,295/-,15x2,270/= ரூபா 114,345/- HM 1-1 2016 (மாதாந்தம்)+ அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள்

**அடிப்படைச் சம்பளப் படி :** ரூபா 80,295/-

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பொது நிர்வாகம்/ வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ சட்டத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து முதல் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

அரசாங்கம் அல்லது அரசு அங்கீகரித்த நிறுவனம் ஒன்றில் பதவிக்கு தொடர்புடைய முகாமைத்துவ தரத்தில் பதினைந்து (15) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தரம் 1 சம்பள அளவுடன் முகாமைத்துவ தரம் (MM 1-1) ஒன்றில் தொடர்புடைய துறை ஒன்றில் 05 ஆண்டுகளுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது :**

விண்ணப்ப முடிவுத் திகதியில் விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச திணைக்களம்/ மாகாண அரசு/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை :** ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**நன்மைகள்**

1. 1983 இன் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பணிக்கொடை
2. மருத்துவ காப்புறுதித் திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதித் திட்டம்/ தொழிலாளர் இழப்பீட்டு காப்புறுதித் திட்டத்திற்கு உட்பட்டது.
3. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஊழியர் 10% மற்றும் தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) தொழில்வழங்குநர் மூலம் 3% பங்களிப்புச் செய்யப்படும்.
4. ஊழியர்களுக்கு பொருந்துகின்ற நிர்வாகத்தின் உபரிச் சலுகைகள்.
5. 1/2015 மற்றும் 1/2015 (1) ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றுநிருபத்தின்படி போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

**2. பதவி :** பணிப்பாளர் (செயன்முறை மேம்பாடு)

**சேவை பிரிவு :** சிரேஷ்ட முகாமையாளர் தரம் - (HM 1-1)

**சம்பள அளவு :** ரூபா 80,295/-,15x2,270/= ரூபா 114,345/- HM 1-1 2016 (மாதாந்தம்) + அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள்

**அடிப்படை சம்பளப் படி :** ரூபா 80,295/-

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. (உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாயம், உணவு விஞ்ஞான பாடம் ஒன்றுடன்) விஞ்ஞானத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டம் அல்லது பொறியியல்/ தொழில்நுட்ப துறையில் முதல் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு பட்டத் தகைமை (முதுமாணி) அல்லது பதவியின் விடய பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் கூட்டு அங்கத்துவம்.

   மற்றும்

   அரசு, அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் முழு அங்கத்துவம்

   மற்றும்

   அரசு, அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:**

விண்ணப்ப முடிவுத் திகதியில் விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச திணைக்களம்/ மாகாண அரசு/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை:** ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**நன்மைகள்**

1. 1983 இன் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பணிக்கொடை
2. மருத்துவ காப்புறுதித் திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதித் திட்டம்/ தொழிலாளர் இழப்பீட்டு காப்புறுதித் திட்டத்திற்கு உட்பட்டது.
3. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஊழியர் 10% மற்றும் தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) தொழில்வழங்குநர் மூலம் 3% பங்களிப்புச் செய்யப்படும்.
4. ஊழியர்களுக்கு பொருந்துகின்ற நிர்வாகத்தின் உபரிச் சலுகைகள்.
5. 1/2015 மற்றும் 1/2015 (1) ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றுநிருபத்தின்படி போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

ஏனையவை,

**மேலுள்ள பதவிகளுக்கானது**

1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. நாட்டின் எந்தப் பகுதியில் பணியமர்த்தப்பட்டாலும் அந்தப் பணியை சிறந்த முறையில் மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமை இருத்தல் வேண்டும்.
3. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

பிறப்புச்சான்றிதழின் பிரதி, கல்வி, தொழில்முறை மற்றும் சேவை சான்றிதழ்களுடன் விண்ணப்பதாரரின் தற்போதைய தொழில், சம்பள விபரங்கள், முன்னர் வகித்த பதவிகள் மற்றும் உறவினர் அல்லாத நடுவரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் விண்ணப்பதாரர்களின் ஏனைய அனைத்து விபரங்களையும் ஒன்றிணைத்த அபேட்சகர்களின் விண்ணப்பத்தை 2024.12.05 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

அரச திணைக்களம்/ மாகாண அரச சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளைச் சேர்ந்த ஊழியர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படல் வேண்டும் என்பதோடு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் ஏற்கனவே நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அதிகாரசபையின் குறித்த பிரிவுத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் அல்லது கையொப்பமிடாத விண்ணப்பங்கள் அல்லது மேல் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அல்லது திணைக்களங்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

www.cda.gov.lk என்ற இணையதள முகவரியில் இருந்து இந்த விளம்பரத்தை தரவிறக்கம் செய்யலாம்.

**தலைவர்**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை**
**இல. 54, நாவல வீதி,**
**நாரஹென்பிட்ட,**
**கொழும்பு 05.**